# எடுத்துக்கொள்ளப்படுதல்
# (Rapture)

*1 தெச 4: 14 இயேசுவானவர் மரித்து பின்பு*
*எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே*
*இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன்*
*அவரோடேகூடக் கொண்டுவருவார்.*
*15 கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள்*
*உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய*
*வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம்*
*நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.*
*16 ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான*
*தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும்*
*வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது*
*கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது*
*எழுந்திருப்பார்கள். 17 பின்பு உயிரோடிருக்கும் நாமும்*
*கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல்*
*அவர்களோடேகூட ஆகாயத்தில்*
*எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும்*
*கர்த்தருடனேகூட இருப்போம். 18 ஆகையால், இந்த*
*வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர்*
*தேற்றுங்கள்.*



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு ! இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். **"வேதாகம ஆட்சி முறைகளின் காலங்கள்"** என்ற வேதபாடத்தில், வேதாகமத்தின் தொடக்க காலத்தில் இருந்து, தேவன் மனிதனை வழிநடத்திய விதங்கள், ஆட்சி முறைகளின் காலங்கள், உடன்படிக்கைகள், போன்ற காரியங்களை படித்தோம். தேவன் மனிதனோடு இடைபட்டிருந்த கடந்த சுமார் 7000 வருடங்களைப்பற்றி சுருக்கமாக அறிந்து கொண்டோம். அடுத்ததாக உலகத்தில் நடைபெறப்போகிற ஒரு முக்கிய சம்பவம் " எடுத்துக்கொள்ளப்படுதல்". ஆங்கிலத்தில் **Rapture.** வேதாகம சரித்திரத்தில், இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு அடுத்ததான அதி முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் இது. ஒவ்வொரு விசுவாசியும் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியும் ஆவலோடு எதிர்பார்த்து, ஆயத்தத்தோடு காத்திருக்க வேண்டிய காரியம் இது. உலகத்தில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கிற அனைத்து மக்களும் நித்தியமாக இயேசுவோடு பூமியில் ஆளப்போகிறார்களா அல்லது நித்தியமாக நரகத்தில் வீழப்போகிறார்களா என்று பிரிக்கும் சம்பவம் இது.







ஆங்கில வேதாகமத்தில் **Rapture** என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்படவில்லை. **"caught up"** என்ற வார்த்தையே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் கிரேக்க வார்த்தை **'Harpazo'.** இவ்வார்த்தையின்

லத்தீன் மொழியாக்கம் **"Rapo"** என்பதாகும். இவ்வார்த்தையின் அர்த்தம் 'எடுத்துக்கொள்ளப்படுதல், தூக்கிக்கொண்டு போகுதல், கைப்பற்றுதல், ஆபத்தில் இருந்து மீட்டுக்கொள்ளுதல்' என்பதாகும். இந்த லத்தீன் வார்த்தையாகிய **"Rapo"** ல் இருந்து **"Rapture"** என்ற ஆங்கில வார்த்தை தருவிக்கப்பட்டது.

*மத் 24: 3 பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்.*

**வருகை** - கிரே; **Parousia:** இவ்வார்த்தையின் அர்த்தம் " காணக்கூடிய விதத்தில் மீண்டும் தோன்றுதல், வருதல்"




## இயேசுவின் வருங்கால இரண்டு தோன்றுதல்கள்.

**1. எடுத்துக்கொள்ளப்படுதல் ( Rapture ). இயேசு தன் பரிசுத்தவான்களுக்காக மத்திய ஆகாயத்துக்கு வருதல்** *( யோவான் 14:1-3; 1 தெச 2:19; 3:13; 4:13-17; 5:23; 1 கொரி 15:23, 51-58; 2 தெச 2:1,7-8; யாக் 5:7-8; 1 யோவான் 2:28 ).*

**2. இரண்டாம் வருகை. இயேசு கிறிஸ்து பரிசுத்தவான்களோடு பூமியை ஆளுகை செய்வதற்காக வருவது.** *( மத் 24:3,27-51; 25:31-46; யூதா 1:14; வெளி 19:11-21; சகரியா 14:1-5.)*




இவ்விரண்டு வருகைகளும் ஒன்று அல்ல. ஒரு வருகையின் இரண்டு நிலைகளும் அல்ல. இரண்டும் தனிப்பட்டவை. இரண்டுக்கும் இடையில் சுமார் 7 வருடங்கள் இடைவெளி உண்டு.

இவ்விரண்டு வருகைகளில் **"எடுத்துக்கொள்ளப்படுதல்"** முதலாவதானது. இது, இயேசு கிறிஸ்து தன் பரிசுத்தவான்களை பரலோகத்துக்கு அழைத்து செல்வதற்காக மத்திய ஆகாயத்தில் வருவது. இதில் இயேசு பூமிக்கு வருவதில்லை.

இரண்டாம் வருகையில்தான் இயேசு கிறிஸ்து பூமியில் இருப்பதற்காக, பூமியில் பல காரியங்களை செய்வதற்காக வருகிறார். இதில் இயேசு கிறிஸ்து பரலோகத்தில் இருந்து தன் பரிசுத்தவான்களோடு வருவார். அதற்கு சுமார் 7 வருடங்களுக்கு முன்பு பரிசுத்தவான்களை பூமியில் இருந்து எடுத்துக்கொள்வார்.




*வெளி 1* ஆம் அதிகாரத்தில் இருந்து *19:21* வரை உள்ள வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்கள்

அனைத்தும் நிறைவேறிய பிறகே இரண்டாம் வருகை இருக்கும். **ஆனால் சபை எடுத்துக்கொள்ளப்படுதல் எந்த வினாடியிலும் இருக்கலாம்.** அதற்காக எதுவும் நிறைவேற்றப்பட வேண்டியதில்லை.




## “சபை எடுத்துக்கொள்ளப்படுதலை” - இயேசு தன் பரிசுத்தவான்களுக்காக வருவதை குறிப்பிடும் வசனங்கள்.

***1. லூக்கா** 21:35 ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்.*

***2. யோவான் 14:1-3.** 3. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.*




***3.** 1 கொரி 15:51-56. 51 இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.*

*52 எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.*

***4.** எபே 5:25-27 27 கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.*

***5.** பிலி 3:10,20-11. 20 நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ( 2 கொரி 5:1-9. )*




***6.** 1 தெச 4:13-18; 2:19; 3:13; 5:9,23. 1 தெச 4:17 பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.*

***7.** 2 தெச 2:1,7-8. 7 அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது.*

*8. கொலோ 3:4 நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். ( 1 யோவான் 2:28, 3:2; 1 பேதுரு 5:4 ).*

*9. யாக் 5:7-8. 8 நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே.*




எடுத்துக்கொள்ளப்படுதல், இரண்டாம் வருகையைப்பற்றி வேத பண்டிதர்களிடையே பலவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. அவற்றின் சமயம், காலம், அர்த்தம் இவைகளைப்பற்றி பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. ஆகவே நாம் வேத வசனங்களை எடுத்து உபதேசிக்கும்போது அல்லது குறிப்பிடும்போது அவ்வசனங்கள் எதைக்குறிப்பிடுகின்றன என்று நன்கு கற்று அறிந்து விட்டு அதன்பிறகு குறிப்பிடுவது நல்லது. அப்படி தெரியாமல் இருக்கும் பட்சத்தில் அவற்றை குறிப்பிடாமல் இருப்பது நல்லது. ஒரு வசனத்தை எடுத்து உபயோகப்படுத்தும்போது அது தானியேலின் 70 வாரங்களை குறிப்பிடுகின்றதா, எடுத்துக்கொள்ளப்படுதலை குறிப்பிடுகின்றதா, இரண்டாம் வருகையை குறிப்பிடுகின்றதா, உபத்திரவ காலத்தை குறிப்பிடுகின்றதா, அல்லது ஏற்கனவே நடந்து முடிந்திருக்கிற ஒரு காரியத்தை குறிப்பிடுகின்றதா என்று நன்கு கற்று அறிந்து விட்டு அதன் பிறகு குறிப்பிடுவது நல்லது.




## எடுத்துக்கொள்ளப்படுதல் எப்போது சம்பவிக்கும் ?

## அதன் அடையாளங்கள் என்ன ?

எடுத்துக்கொள்ளப்படுதல் சம்பவிப்பதற்கு தனிப்பட்ட அடையாளங்கள் ஒன்றும் கிடையாது. எடுத்துக்கொள்ளப்படுவதே ஒரு மாபெரும் அடையாளம்தான். எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பு நடந்திருக்க வேண்டிய தீர்க்கதரிசனங்கள் என்று ஒன்றும் இனிமேல் இல்லை. எந்த வினாடியும் எடுத்துக்கொள்ளப்படுதல் சம்பவிக்கலாம். *( தீத்து 2:13, பிலி 3:20-21 ).* இயேசுவின் வருகையை குறிக்கும் அடையாளங்கள் அனைத்தும் இயேசுவின் இரண்டாம் வருகைக்கானவை;
எடுத்துக்கொள்ளப்படுதலுக்கானவை அல்ல.




## எடுத்துக்கொள்ளப்படுதலில் நடக்கும் சம்பவங்கள்.

*1 தெச 4:16 ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்;*

*அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.*
17 *பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.*

**இயேசு வானத்தில் இருந்து இறங்கி வரும் இடம்.** இவ்வசனத்தில் "ஆகாயத்தில்" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இடம், கிரேக்கர்கள் பூமியில் இருந்து **6403** அடி உயரத்தில் இருக்கும் இடத்தை குறிப்பிடுவது. அப்படியானால், இயேசு கிறிஸ்து சுமாராக இந்த உயரத்தில் வருவார்.

**ஆரவாரம்.** இதன் ஆங்கில வார்த்தை **"shout"** என்பதாகும். கிரேக்கவார்த்தை **"keleuma".** இதன் அர்த்தம் கட்டளை, யுத்தசமயத்தில் கொடுக்கப்படும் ஒரு கட்டளை, ஒரு செயலை செய்வதற்கு தூண்டுதல். இங்கே இவ்வார்த்தையின் அர்த்தம் " மரித்தோர் உயிரோடெழும்புவதற்காக கொடுக்கப்படும் கட்டளை. இயேசு கிறிஸ்து லாசருவை உயிரோடெழுப்புவதற்காக கொடுத்த கட்டளையை போன்று *( யோவான் 11:43 ).* மரித்தோர் இயேசுவின் சத்தத்தை கேட்டு உயிரோடெழும்புவார்கள் *( யோவான் 5:28 ).*

**பிரதான தூதனுடைய சத்தம்;** பிரதான தேவதூதன் மிகாவேல் *( யூதா 1:9 )*

**தேவ எக்காளம்.** *( 1 கொரி 15:52 )* நியாயப்பிரமாணம் கொடுக்கு முன்பும் எக்காள சத்தம் தொனித்தது *யாத் 19:18-20.*

**கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் உயிர்த்தெழுதல்.**

**கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்:** மறுபடியும் பிறந்தவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள். இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்பு, அவரது வரவை முன்னோக்கிப்பார்த்து மரித்த பரிசுத்தவான்கள். இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு பின்பு, அவரது வரவை பின்னோக்கிப்பார்த்து மரித்த பரிசுத்தவான்கள். *( 2 கொரி 5:17-18 ).*

**உண்மையான விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுதல்**

**உலகமெங்கிலும் இருக்கிற உண்மையான விசுவாசிகளும், சிறுவர் சிறுமியரும் இயேசுகிறிஸ்துவைப் போன்ற ஒரு மகிமையான சரீரம் பெற்றுக்கொள்வார்கள்.**

*1 யோவான் 3:2 பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி*








*எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். ( பிலி 3:20-21; 1 கொரி 15:51-54; கொலோ 3:4).* ஒவ்வொருவரும் அவரவருடைய தனிப்பட்ட நிறம், குணங்களோடு கூடிய மகிமையான சரீரம் பெற்றுக்கொள்வார்கள். *( 1 கொரி 15:35-54 ).* பின் தேவனுடைய வல்லமையால் எடுக்கப்பட்டு இயேசுவை மற்ற விசுவாசிகளோடு கூட ஆகாயத்தில் சந்திப்பார்கள்.

இப்படியாக எடுத்துக்கொள்ளப்படாதவர்கள் அனைவரும், பூமியில் **7** வருட உபத்திரவ காலத்தை சந்திப்பதற்காக கைவிடப்படுவார்கள்.




## எடுத்துக்கொள்ளப்படுவதற்கு தகுதிகள்

**1. எடுத்துக்கொள்ளப்படுவதற்கு மிக முக்கியமான தகுதி " ஒருவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறந்திருக்க வேண்டும் - இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும்.**

*ரோமர் 10: 9 என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.*
*10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.*
*11 அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது.*




**2. இயேசுவுக்குள்ளாக இருக்க வேண்டும்** *( 1 தெச 4:14,16; 2 கொரி 5:17-18 ).*

**3. இயேசுவுக்கு சொந்தமானவர்களாக இருக்க வேண்டும்** *( 1 கொரி 15:23; கலா 5:24 ).*

**4. பரிசுத்தவான்களாக ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும்** *( வெளி 20:4-6; எபி 12:14 )*

**5. நன்மை செய்கிறவர்களாக இருக்க வேண்டும்** *( யோவான் 5:28-29 ).*

**6. பாத்திரவான்களாக இருக்க வேண்டும்** *( லூக்கா 21:36 ).*

**7. சபையில் இருக்க வேண்டும்** *( 1 கொரி 12:13; எபே 1:20-23; 4:4-6; 5:27; கொலோ 1:18,24).*




**8. சுத்தமானவர்களாக இருக்க வேண்டும்** *( 1 யோவான் 3:2-3 ).*

**9. கறை திறை இல்லாமல் இருக்க வேண்டும்** *( எபே 5:27 ).*

**10. ஆவியால் நடத்தப்படுகிறவர்களாக இருக்க வேண்டும்** *( கலா 5:19-21 ).*

**11. ஒளியில் நடக்கிறவர்களாக இருக்க வேண்டும்** *( 1 யோவான் 1:7; கொலோ 2:6 ).*

" இங்கே நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும் "**இயேசுவுக்குள் மரித்தவர்கள் மாத்திரமே** எடுத்துக்கொள்ளப்படுதலில் உயிர்த்தெழுவார்கள் *( யோவான் 14:1-3; 1 தெச 4:13-18; 1 கொரி 15:23, 51-58).* இவர்களோடு கூட உயிரோடிருக்கும் சபை எடுத்துக்கொள்ளப்படும். இங்கே சபை என்று சொல்லும்போது, இப்போது நாம் காண்கிற அனைத்து கிறிஸ்தவ சபைகளிலும் இருக்கிற அனைவரையும் குறிப்பிடவில்லை. உலகமெங்கும் இருக்கிற, உண்மையான இரட்சிப்பை வைத்துக்கொண்டிருக்கிற, பரிசோதனைக்கு நிலை நிற்கிற விசுவாசம் உடைய அனைத்து விசுவாசிகளையும் சேர்த்துதான் சபை என்று குறிப்பிடுகிறோம். மற்ற அனைவரும் எந்த சபையில் அங்கத்தினராக இருந்தாலும், பெயர் கிறிஸ்தவராக இருந்தாலும், இரட்சிக்கப்படாமல் இருந்தால் பூமியில் 7 வருட உபத்திரவ காலத்தை அனுபவிப்பதற்காக கைவிடப்படுவார்கள்"......................

( வேதபண்டிதர்; ஹூஸ்ட் ).

## எடுத்துக்கொள்ளப்படுதலுக்கும் இரண்டாம் வருகைக்கும் இடையில் பரலோகத்தில் நடக்கும் 9 காரியங்கள்.

**1. எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் இயேசுவோடு கூட பரலோகத்துக்கு செல்லுதல்** *( யோவான் 14:13; அப் 1:11; எபே 1:20; எபி 8:1; 9:24 )*

*யோவான் 14:3. 3 நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.*

இயேசு இருக்கிற இடம் பரலோகம். ஆகவே அவருடைய இடத்துக்கு செல்வதென்றால் பரலோகத்துக்கு செல்வதே.

**2. தேவனுக்கு முன்பாக நிறுத்தப்படுதல்** *( எபே 5:27; கொலோ 3:4 )*

*1 தெச 3:13 இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.*

**3. பரிசுத்தவான்கள் குற்றமற்றவர்கள் என்று அறிவிக்கப்படுதல்** *( 1 தெச 3:13; 5:23 ).*









**4. பரலோக வாசஸ்தலங்களில் குடியமர்த்தப்படுதல்** *(யோவான் 14:1-3; எபி 11:10-16; 13:14; வெளி 3:12 ).*

**5. பரிசுத்தவான்கள் தங்கள் வேலைகளுக்கான பரிசுகளைப்பெற இயேசுவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிறுத்தப்படுதல்** *( ரோமர் 14:10; 1 கொரி 3:11-15; 2 கொரி 5:10 - 11 )*







**கிறிஸ்துவின் நியாயாசனம்.**

*2 கொரி 5:10 ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையம்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.*

பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிற்பதற்கும், பாவிகள் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நிற்பதற்கும் உள்ள வேறுபாடுகளை நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் நியாயாசனம், பரிசுத்தவான்களுக்கு தண்டனை கொடுப்பதற்காக அல்ல, பரிசுகள் கொடுப்பதற்காக *( யோவான் 5:24; ரோமர் 8:1 ).* இங்கே நியாயாசனம் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தையின் கிரேக்க வார்த்தை **“Bema”** என்பதாகும். கிரேக்கர்களது காலத்தில் இது ஒரு உயர்ந்த மேடையாக இருக்கும். இங்கிருந்துதான் முக்கிய பேச்சுக்கள், தீர்ப்புக்கள். ஒலிம்பிக் விளையாட்டுகளில் ஜெயித்தவர்களுக்கு பரிசுகள், யுத்தத்தில் வீர தீர சாகசங்கள் புரிந்தவர்களுக்கு பரிசுகள் கொடுக்கப்படும்*(மத் 27:19; அப் 12:21; 18:12).* இயேசுவின் நியாயாசனம் பரிசுத்தவான்களை குற்றப்படுத்தும் இடமல்ல. பரிசுத்தவான்களின் பாவங்களுக்கான தண்டனை இயேசுவுக்கு கொடுக்கப்பட்டாகி விட்டது. இங்கே அவர்கள் பூமியில் இருக்கும்போது செய்த வேலைகளுக்கான பரிசுகள் ( உ.ம்: கிரீடங்கள்) கொடுக்கப்படும். **அவர்களது வேலை பரிசுத்த ஆவியினால் நடத்தப்படாதிருந்தால் பரிசுகள் கிடைக்காது** *(ரோமர் 14; கொலோ 3; மத் 16:27; ரோமர் 2:6 ).* வேலைகள் கட்டிடம் கட்ட உபயோகப்படுத்தப்படும் பொருட்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது *( 1 கொரி 3:10-15 ).* பரிசுத்தவான்களின் ஊழியங்கள் அக்கினியால் சோதனை செய்யப்படும். அவர்களது வேலைகள் பொன், வெள்ளி, விலையேறப்பட்ட கற்கள் போன்று இருந்தால் அவை அக்கினியால் எரிந்து போகாது. அந்த வேலைகளுக்கு தகுந்த பரிசுகள் அவர்களுக்கு கொடுக்கப்படும். வேலைகள் மரம், வைக்கோல்,புல் போன்று இருந்தால் அவை அக்கினியில் எரிந்து போகும், ஆகவே அவர்களுக்கு **பரிசுகள் கிடைக்காது**

*( ரோமர் 14:10; 2 கொரி 5:10,11 ).*

**பரிசுத்தவான்கள் கீழ்க்காணும் காரியங்களில் பரிசோதிக்கப்படுவார்கள்.**



**1.** உபதேசங்கள் *( ரோமார் 2:14-16; ரோமர் 14 ).*

**2.** மற்றவர்களோடு நாம் நடந்து கொள்ளும் விதம் *( மத் 18; ரோமர் 14 ).*

**3.** மாம்சக்கூறுகள் *( கொலோ 3; ரோமர் 1-2; 8:1-13; 14:1-23 ).*

**4.** வார்த்தைகள் *( மத் 12:32-37; ரோமர் 14 ).*

**5.** மற்றவர்களை பாதிக்கும் காரியங்கள்; பகை, சண்டை, சச்சரவுகள், அநாவசிய பேச்சுக்கள்… *( ரோமர் 1:29-32; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கொலோ3; எபே 4:1-32; 5:1-33; ரோமர் 12:1-21; 14:1-23 ).*

**6.** தங்களை பாதிக்கும் காரியங்கள்; அசட்டையாக விட்ட வாய்ப்புக்கள், வீணாக்கிய தாலந்துகள், எனோதானோ என்ற ஜீவிதம், ஆவிக்குரிய காரியங்களில் அஜாக்கிரதை *( ரோமர் 2:14-16; எபி 2:1- 4; கலா 5:1-26; 6:1-10; கொலோ 3 ).*



**7.** தேவனை பாதிக்கும் காரியங்கள்; ஒளியில் நடவாமை, கீழ்ப்படியாமை, ஆவியானவருக்கு கீழ்ப்படியாமை, மறுத்தல்… *( 1 கொரி 12; ரோமர் 12; எபே 3:1-32; 5:1-33 ).*

**6. வழக்கமான ஆராதனை** *( வெளி 19:1-9; லூக்கா 22:16 ).*

**7. வழக்கமான வாழ்க்கை** *( லூக்கா 22:29-30; யோவான் 14:1-3; வெளி 1:6 ).*

**8. ஆட்டுக்குட்டியானவரின் திருமணம்** *( வெளி 19:1-9 ).*



இப்பொழுது, சபை ( மறுபடியும் பிறந்தவர்கள் ) இயேசுவுக்கு திருமணமாகி இருக்கிற மணவாட்டி *( மத் 9:15; மாற்கு 2:19,20; யோவான் 3:29; எபே 5:25-33). வெளி 19:1-10* ல் திருமணம், விருந்து என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படியானால் இப்போது சபை இயேசுவின் மணவாட்டி இல்லையா ? இந்த கேள்விக்கான பதிலை யூத பாரம்பரிய வழக்கங்களில் இருந்து புரிந்து கொள்ளலாம். இவ்வழக்கப்படி திருமணம் நிச்சயிக்கப்பட்டவர்கள் சட்டப்படி திருமணம் செய்து கொண்டவர்கள் என்ற தகுதியில் இருக்கிறவர்கள். யாராவது ஒருவர் நம்பிக்கை துரோகம் செய்வது வேசித்தனமாகும் *( உபா 22:23; மத் 1:19 ).* இந்த திருமணத்தின் இறுதிச்சடங்குகள், அவர்கள் இருவரும் கணவன் மனைவியாக கூடிவரும்போது நிறைவாகும். அச்சமயத்தில் ஒரு கல்யாண விருந்தும் கொடுக்கப்படும். *வெளி 19* ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது இயேசுவுக்கும்

சபைக்குமான திருமண உடன்படிக்கையின் நிறைவுச்சடங்கு.

**9. இரண்டாம் வருகைக்கு, அர்மகேதோன் யுத்தத்துக்கு, பூமியில் ஒரு நித்திய அரசாங்கத்தை உருவாக்குவதற்கான ஆயத்தம்** *( வெளி 19:11-21; 20:1-10; சக. 14 )*

**இப்படியாக 7 வருடங்கள், எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் இயேசுவோடு, சகல பரிசுத்தவான்களோடு பரலோகத்தில் மகிழ்ந்திருப்பார்கள். ஆனால் இச்சமயத்தில் பூமியில் கைவிடப்பட்டவர்கள், உலகம் இதுவரை சந்தித்திராத மகாக்கொடிய உபத்திரவங்களை சந்திப்பார்கள்.**

**அன்பு சகோதரா, சகோதரி ! எடுத்துக்கொள்ளப்படுதல் எந்த வினாடியும் சம்பவிக்கலாம். நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா ? ஒரு வேளை நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்கள் என்றால் மிக்க மகிழ்ச்சி; ஆனாலும் உங்களை சுற்றி இருக்கிறவர்களின், உறவினர்களின், நண்பர்களின், நிலைமை என்ன ? அவர்கள் எடுத்துக்கொள்ளப்படுவார்களா அல்லது மகா உபத்திரவங்களுக்குள் கைவிடப்படுவார்களா ? அவர்களையும் இயேசுவின் இரட்சிப்பின் சுவிசேஷம் சொல்லி வருகைக்கு ஆயத்தப்படுத்துவது நமது கடமை அல்லவா ?**

**ஆயத்தமாயிருப்போம்.................... மற்றவர்களை ஆயத்தப்படுத்துவோம்.**

**( *குறிப்பு: இதன் தொடர்ச்சியாக* - உபத்திரவக்காலம், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை, ஆயிர வருட அரசாட்சி, வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு - போன்ற வேதபாடங்கள் வெளியிடப்படும். தயவு செய்து தொடர்ந்து படித்து பயனடையுங்கள்)**

**ஆமென்.**

**நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**Bro D.Vergin Kumar.**

If you need any clarifications, if you have any doubts kindly contact me at deeveekumar@yahoo.com Ph: 968 25572195, 99663557.







Resources; International Standard Bible Encyclopedia, The Bible Exposition commentary - New Testament, Dakes bible commentary, Andrew Wommack Bible commentary, Vine's Expository Dictionary of Old Testament Words, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible Concordance, Vincent's Word Studies in the New Testament, Scofield's Bible Dispensational Plan. Wuest's word studies from the Greek New Testament. The Biblical Illustrator (New Testament). All Bible quotes are from King James Version. In Tamil Bible, some verses me be above or below than the mentioned English Bible verse.

-----------------------